# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# நான்காம் பத்து

## ஒன்பதாம் திருமொழி - நும்மைத் தொழுதோம்
## திருவிந்தளூர்

** நும்மைத் தொழுதோம் * நுந்தம் பணி செய்திருக்கும் நும் அடியோம் *
இம்மைக்கு இன்பம் பெற்றோம் * எந்தாய்! இந்தளூரீரே! **
எம்மைக் கடிதாக் கருமம் அருளி * ஆவா! என்று இரங்கி *
நம்மை ஒருகால் காட்டி நடந்தால் * நாங்கள் உய்யோமே? 1

** சிந்தை தன்னுள் நீங்காது இருந்த திருவே! * மருவினிய
மைந்தா! * அந்தண் ஆலி மாலே! * சோலை மழகளிறே! **
நந்தா விளக்கின் சுடரே! * நறையூர் நின்ற நம்பீ! * என்
எந்தாய்! இந்தளூராய்! * அடியேற்கு இறையும் இரங்காயே! 2

பேசுகின்றது இதுவே * வையம் ஈரடியால் அளந்த *
மூசி வண்டு முரலும் * கண்ணி முடியீர்! ** உம்மைக் காணும்
ஆசை என்னும் * கடலில் வீழ்ந்து இங்கு அயர்த்தோம் * அயலாரும்
ஏசுகின்றது இதுவே காணும் * இந்தளூரீரே! 3

ஆசை வழுவாது ஏத்தும் * எமக்கிங்கு இழுக்கு ஆய்த்து * அடியோர்க்குத்
தேசம் அறிய * உமக்கே ஆளாய்த் திரிகின்றோமுக்கு **
காசின் ஒளியின் திகழும் வண்ணம் * காட்டீர் எம்பெருமான்! *
வாசி வல்லீர்! இந்தளூரீர்! * வாழ்ந்தே போம் நீரே 4

தீ எம்பெருமான் நீர் எம்பெருமான் * திசையும் இரு நிலனு
மாய் * எம்பெருமான் ஆகி நின்றால் * அடியோம் காணோமால் **
தாய் எம்பெருமான் * தந்தை தந்தை ஆவீர் * அடியோமுக்
கே எம்பெருமான் அல்லீரோ? நீர் * இந்தளூரீரே! 5

சொல்லாது ஒழியகில்லேன் * அறிந்த சொல்லில் * நும் அடியார்
எல்லாரோடும் ஒக்க * எண்ணி இருந்தீர் அடியேனை **
நல்லார் அறிவீர் தீயார் அறிவீர் * நமக்கு இவ்வுலகத்து *
எல்லாம் அறிவீர் ஈதே அறியீர் * இந்தளூரீரே! 6

மாட்டீர் ஆனீர் பணி நீர் கொள்ள * எம்மைப் பணி அறியா
வீட்டீர் * இதனை வேறே சொன்னோம் * இந்தளூரீரே! **
காட்டீர் ஆனீர் * நுந்தம் அடிக்கள் காட்டில் * உமக்கு இந்த
நாட்டே வந்து தொண்டர் ஆன * நாங்கள் உய்யோமே? 7

முன்னை வண்ணம் பாலின் வண்ணம் * முழுதும் நிலை நின்ற *
பின்னை வண்ணம் கொன்டல் வண்ணம் * வண்ணம் எண்ணுங்கால் **
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் * புரையும் திருமேனி *
இன்ன வண்ணம் என்று காட்டீர் * இந்தளூரீரே! 8

எந்தை தந்தை தம்மான் என்றென்று * எமர் ஏழ் அளவும் *
வந்து நின்ற தொண்டரோர்க்கே * வாசி வல்லீரால் **
சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர் * சிறிதும் திருமேனி *
இந்த வண்ணம் என்று காட்டீர் * இந்தளூரீரே 9

** ஏரார் பொழில் சூழ் * இந்தளூரில் எந்தை பெருமானை *
காரார் புறவின் மங்கை வேந்தன் * கலியன் ஒலி செய்த **
சீரார் இன்சொல் மாலை * கற்றுத் திரிவார் உலகத்தில் *
ஆரார் அவரே * அமரர்க்கு என்றும் அமரர் ஆவாரே 10

**அடிவரவு:** நும்மை சிந்தை பேசுகின்றது ஆசை தீ சொல்லாது மாட்டீர் முன்னை எந்தை ஏரார் ஆய்ச்சியர்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---